## பத்திரிக்கைச் செய்தி

**குற்ற வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக ஒரு லட்சம் லஞ்சம் கேட்டு வாங்கிய திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திருச்சி லஞ்ச ஒழிப்பு காவல் துறையினரால் கைது.**

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் இந்திரா நகரில் வசித்து வரும் புலிகேசி என்பவரது மனைவி திருமதி.ராதா என்பவர் பத்திரப்பதிவு எழுத்தராக திருவெறும்பூரில் அலுவலகம் அமைத்து தொழில் செய்து வருகிறார். அவர் கடந்த 2019ம் ஆண்டில் குமார் என்பவர் கொடுத்த ஆவணங்களை வைத்து வீட்டு மனைகளுக்கு கிரையபத்திரம் தயார் செய்து திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 20.6.2019 அன்று ஆவண பதிவு செய்து வேலையை முடித்தும் பின்னர் 3 மாதம் கழித்து மேற்படி குமார் அவருக்கு செய்து கொடுத்த பத்திரத்தில் சில திருத்தங்கள் இருப்பதாகச் சொல்லி அதனை சரிசெய்து பிழைத்திருத்தம் செய்து மீண்டும் ஆவண பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி குமார் என்பவர் செய்த பத்திரப்பதிவு தவறானது என்று கடந்த 2021–ல் திருச்சி தென்னூரைச் சேர்ந்த சுந்தரம் என்பவர் அளித்த புகாரின்பேரில் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவில் வழக்குப்பதிவு செய்து திருமதி.ராதா கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் மேற்படி வழக்கிற்காக திருமதி.ராதாவை கடந்த 11.9.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு–II அலுவலகத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியதன் பேரில், விசாரணைக்காக சென்று வந்துள்ளார். இந்நிலையில் கடந்த 14.09.2023 மாலை விசாரணைக்கு சென்றபோது திருமதி.ராதாவை விசாரணை செய்த திருச்சி மாவட்ட குற்றப்பிரிவின் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட், இந்தவழக்கின் புகார்தாரர் சுந்தரத்திற்கு பத்து லட்ச ரூபாய் கொடுக்க வேண்டும் என்று எழுதி வாங்கிக் கொண்டு பின்னர், மேற்படி வழக்கில் திருமதி.ராதா மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் இருக்க ரூ.1 லட்சம் லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத திருமதி.ராதா திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கொடுத்த புகாரின்பேரில் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவின் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக லஞ்ச ஒழிப்பு துறையினரின் ஆலோசனையின் பேரில் இன்று 15.09.2023 தேதி புகார்தாரர் திருமதி.ராதா பவுடர் தடவப்பட்ட ரூபாய் நோட்டுகளுடன் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவின் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் அவர்களை சந்தித்தபோது, புகார்தாரரிடம் திரு.ஆல்பர்ட் ரூ.1 லட்சம் லஞ்சமாக கேட்டுப் பெற்றார். திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலா்களால் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவின் காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் என்பவரை கைது செய்து அவரிடமிருந்து ரூ.1 லட்சம் லஞ்ச பணத்தை கைப்பற்றி, விசாரணை முடித்து, ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.